# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081628

1. District மாவட்டம் : Madurai    PS காவல்நிலையம் : V & AC    Year ஆண்டு : 2022    FIR No. மு.த.அ. எண் : 03/2022    Date நாள் : 12.04.2022

2. (i) Act சட்டம்: P.C Act 1988    Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: as amended by the
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: Prevention of corruption
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை    ① 05.04.2022 at 15.15 hrs
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை    ② 12.04.2022 at 11.15 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.04.2022    Time நேரம் : 17.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.04.2022    Time நேரம் : 18.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: [illegible] செய்த புகார் மனு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 50 km வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address முகவரி : 1. வாதியின் நிலம்
   2. உதவி மின் பொறியாளர் அலுவலகம், கொட்டாம்பட்டி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. கோபால[illegible]    (b) Father's/ Husband's Name : V. [illegible]
   குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்    (g) Address : முகவரி 3/98, செட்டிகுளம் வடகரை, கொட்டாம்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. தங்க மாயாண்டி, உதவி மின் பொறியாளர் தமிழ்நாடு மின் வாரிய அலுவலகம், கொட்டாம்பட்டி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12/04/2022

[signature] INSPR VRAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 12/4/2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.04.2022 at 20.00 hrs

Name: பெயர் ......A. KANNAN......
Rank: நிலை Inspector of Police, VRAC, Madurai No. எண் ......

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 12.04.2022-ஆம் தேதி 17.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி, செட்டிகுளம் வடகரை கதவு எண்.3/98-ல் வசிக்கும் S. கோபால கிருஷ்ணன், த/பெ. செல்வம் என்பவர் ஆஜராகி தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் S. கோபாலகிருஷ்ணன், த/பெ. V. செல்வம், 3/98, செட்டிகுளம் வடகரை, கொட்டாம்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் - 625 103 பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். எனது மனைவி முருகேஸ்வரி பெயரில், மேலூர் தாலுகா பொட்டப்பட்டி கிராமத்தில் சர்வே எண்.197/4-ல் 2 ஏக்கர் 7 செண்டு புன்செய் நிலம் உள்ளது. அந்த நிலத்தில் கிணறு உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகின்றேன். மேற்படி நிலத்திற்கு எனது மனைவி முருகேஸ்வரி பெயரில் இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி கடந்த 31.03.2022-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு, மதுரை நத்தம் ரோட்டில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் மதுரை கிழக்கு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு நானும், எனது மனைவியும் நேரில் சென்று விண்ணப்ப மனு கொடுத்தோம். அதே சமயத்தில், எங்கள் உறவினர் குமுட்ரான்பட்டியைச் சேர்ந்த பிச்சன் அம்பலம் மகன் நடராஜன் மற்றும் அவரது மகன் ஜெயகாந்தன் ஆகியோர் அவர்களுடைய பள்ளபட்டி கிராமம் புல எண்.200/1-ல் உள்ள நிலத்திற்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் கொடுக்க வந்திருந்தார்கள். அப்போது, நாங்கள் கொடுத்த விண்ணப்பங்களை பெற்றுக்கொண்ட அலுவலர் நாராயணன் என்பவர், எங்களது விண்ணப்பங்களை பார்வையிட்ட பின்னர், நடராஜன் பெயரில் இருந்த விண்ணப்பத்தில் கைரேகை வைத்திருந்த காரணத்தினால், சாட்சியாக எனது கையொப்பம் போட சொன்னதால், அவரது விண்ணப்பத்தில் உறவினர் என்ற முறையில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். அதன்பின்னர், மேற்படி விண்ணப்பங்களின் நகலை கொட்டாம்பட்டி உதவி மின் பொறியாளர் அவர்களிடம் அளிக்குமாறு கூறினார். நாங்கள் நாராயணன் அவர்களிடம், அது சம்மந்தமாக விபரம் கேட்ட போது, அவர் உங்களது விண்ணப்ப நகலையும், உங்களது விவசாய நிலத்தையும் ஆய்வு செய்து, அறிக்கை அளித்த பிறகு உங்களுக்கு உரிய டெபாசிட் செலுத்துவதற்கான இரசீது வழங்கப்படும் என்று கூறினார். அதன்பேரில், மறுநாள் 01.04.2022-ம் தேதி வெள்ளிகிழமை, நானும், நடராஜன் மகன் ஜெயகாந்தன் இருவரும், கொட்டாம்பட்டி மின்வாரிய அலுவலத்தில், உதவி மின் பொறியாளர் திரு. தங்க மாயாண்டி அவர்களை காலை 10.30 மணியளவில் நேரில் சந்தித்து, எங்களது இலவச விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்ப நகலை அளித்தோம். அவர் எங்களது விண்ணப்ப நகல்களை பார்வையிட்டு, தங்களது நிலம் அமைந்துள்ள பஞ்சாயத்து தலைவர் அவர்களிடம்

தடையில்லா சான்று பெற்று இதனுடன் இணைக்க வேண்டும் என கூறினார். மேலும், அவர் இரு தினங்களில் எங்களது நிலங்களை ஆய்வு செய்ய நேரில் வருவதாகவும், அப்போது தடையில்லா சான்றை பெற்று கொள்வதாகவும் கூறினார். அதன்பின்னர், கடந்த 05.04.2022-ம் தேதி செவ்வாய் கிழமை மதியம் 02.30 மணியளவில், எனது அலைபேசி எண். 91714 11912-ல் உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டி 88382 78399 என்ற செல்போன் எண்ணிலிருந்து, என்னிடம் தொடர்புகொண்டு பேசி, உங்கள் இடத்தை பார்க்க வேண்டும் வருகின்றீர்களா எனக் கேட்டார். அப்போது, நான் வெளியூர் வந்துள்ள விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் ஊருக்கு வந்துவிட்டு என்னை கூப்பிடுங்கள் என்று சொன்னார். அதன்பின்னர், சிறிது நேரத்தில், எனது உறவினர் நடராஜன் மகன் ஜெயகாந்தனையும் அலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது இடத்தை பார்க்க வேண்டிய விபரம் தெரிவித்துள்ளார். அதனால், ஜெயகாந்தன், உதவி மின்பொறியாளர் தங்க மாயாண்டியை அழைத்துக்கொண்டு, பள்ளபட்டி கிராமம் புல எண்.200/1-ல் அமைந்துள்ள அவரது நிலத்திற்கு அழைத்துச்சென்றுள்ளார். அங்கே நிலத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த பிறகு, எனது நிலம் குறித்து ஜெயகாந்தனிடம் விபரம் கேட்டு, அந்த நிலத்தையும் பார்வையிடலமா என கேட்டுள்ளார். அதனால், ஜெயகாந்தன் என்னிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு, நிலத்தை காண்பிக்கவா என கேட்டார். நான் சரி காண்பியுங்கள் என சொன்னேன். அதன்பேரில், அன்றே பொட்டப்பட்டி கிராமம் சர்வே எண்.197/4-ல் அமைந்துள்ள எனது நிலத்திற்கு, ஜெயகாந்தன், உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டியை அழைத்துச் சென்றுள்ளார். என்னுடைய நிலத்தை மதியம் சுமார் 03.15 மணியளவில் பார்வையிட்ட பிறகு, ஜெயகாந்தனிடம், ஒரு நிலத்தை ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப ரூ.3,000/- வீதம் இரு நிலங்களுக்கு ரூ.6,000/- செலவாகும் என கேட்டுள்ளார். அப்போது, ஜெயகாந்தன் இது அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா என தங்க மாயாண்டியிடம் கேட்டதற்கு, "இல்லை. தன்னுடைய செலவுக்கு" என்று கூறியுள்ளார். அதன்பின்னர், ஜெயகாந்தன், இது சம்மந்தமாக என்னிடம் கலந்து பேசிவிட்டு சொல்வதாகவும், தன்னிடம் அவ்வளவு பணம் தற்போது இல்லை எனவும் சொல்லியுள்ளார். அதற்கு தங்க மாயாண்டி, பணம் ஏற்பாடு செய்துவிட்டு, தன்னை வந்து நேரில் சந்திக்குமாறும், தற்போது வந்ததற்கு ரூ.500/- மட்டுமாவது கொடுங்கள் என ஜெயகாந்தனிடம் கேட்டு ரூ.500/-யை தங்க மாயாண்டி வாங்கியுள்ளார். அந்த விபரத்தை, ஜெயகாந்தன் என்னிடம் அலைபேசியில் கூறினார். அப்போது, நான் தடையில்லா சான்றை கொடுக்கும் போது, AE-யிடம் பேசிக்கொள்வோம் என கூறினேன். சொந்த வேலைகள் காரணமாக, ஒரு வாரம் கழித்து இன்று 12.04.2022-ம் தேதி, காலை சுமார் 11.15 மணியளவில், நானும், ஜெயகாந்தனும் எங்களது விவாசய இலவச மின் இணைப்பு பெறுவதற்காக அறிக்கை அனுப்பவேண்டியது சம்மந்தமாக கொட்டாம்பட்டி உதவி மின்பொறியாளர் தங்க மாயாண்டியை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து, பஞ்சாயத்து

தலைவர்களிடம் பெற்ற தடையில்லா சான்றுகளை அவரிடம் கொடுத்தோம். அவைகளை பெற்று கொண்ட அவர், எங்களிடத்தில், ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப ஒரு நிலத்திற்கு தலா ரூ.3,000/- வீதம் இரு நிலங்களுக்கு ரூ.6,000/- என சொல்லியிருந்தேனே. பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டார். அப்போது, ஜெயகாந்தன், சார் நீங்கள் நிலத்தை ஆய்வு செய்யும் போது என்னிடம் ரூ.500/- கேட்டு வாங்கி கொண்டீர்களே என சொன்னார். அதற்கு, உதவி மின்பொறியாளர் தங்க மாயாண்டி என்னை பார்த்து, சரி நீங்கள் உங்கள் இடத்திற்கு ரூ.3,000/- கொடுங்கள், ஜெயகாந்தனை பார்த்து, நீ உன் இடத்திற்கு ரூ.2,500/- கொடு என சொன்னார். அப்போது, நான் விவசாயம் சரியாக இல்லை. கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு, குறைத்துதான் சொல்லியுள்ளேன். கேட்ட பணத்தை உடனே கொடுங்கள். உங்கள் வேலை நடக்கும். இல்லையென்றால் அலைய வேண்டியிருக்கும் என சொன்னார். மேலும், நீங்கள் இரண்டு பேரும் வரவேண்டியதில்லை. என்னை பார்த்து "நீ மட்டும் இரண்டு பேருடைய பணத்தையும் சேர்த்து மொத்தம் ரூ.5,500/-யை கொண்டு வந்து நாளை காலை என்னிடம் கொடு. உடனே, நில ஆய்வு அறிக்கையை அனுப்பிவிடுகிறேன்" என்று சொன்னார். அப்போதுதான், நீங்கள் பணத்தை கட்டி இரசீது பெற்று கொள்ளமுடியும். மேலும், உங்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் விவசாய இலவச மின் இணைப்பு விரைவில் கிடைக்கும் என சொன்னார். நாங்கள் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டோம். நாங்கள் இருவரும் வீட்டுக்கு திரும்பும் போது, நாம் எவ்வளவு செலவு செய்து விவசாயம் பார்க்கிறோம். அரசு கொடுக்கும் இலவச விவசாய மின் இணைப்பு கொடுப்பதற்கு, விவசாயிகளான நம்மிடமே இப்படி லஞ்சம் கேட்கிறார்களே என மனம் வருத்தமடைந்தோம். ஆகையால், இலவச விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பத்திற்கு, நிலத்தை ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப லஞ்சம் கேட்ட உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டி மீது லஞ்ச ஒழிப்பு பிரிவில் புகார் கொடுக்க முடிவு செய்தோம். அதன்பேரில், ஜெயகாந்தனின் தந்தை நடராஜன் பெயரில் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம், அவர்களது இடத்தின் பட்டா, பள்ளப்பட்டி ஊராட்சி தலைவர் அளித்த தடையில்லா சான்று, பள்ளப்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலர் அளித்த நில வரைபடம், சான்று, மற்றும் அடங்கல் ஆகியவற்றின் நகல்களையும், அத்துடன் அவரது நிலத்திற்கு ஆய்வு செய்த அறிக்கை அனுப்ப தங்க மாயாண்டி கேட்ட லஞ்ச பணம் ரூ.2,500/- (1 இரண்டாயிரம் மற்றும் 5 நூறு ரூபாய் நோட்டுக்கள்) என்னிடம் கொடுத்த பின்பு அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார். நான், என்னிடமும், ஜெயகாந்தனிடமும் லஞ்சம் கேட்ட கொட்டாம்பட்டி உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டி மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இந்த புகார் மனுவுடன், எனது மனைவி முருகேஸ்வரி பெயரில் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம், எங்களது இடத்தின் சிட்டா, பொட்டப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அளித்த நில வரைபடம், சான்று மற்றும் அடங்கல், பசலி 1431-க்குரிய நில வரி

இரசீது, பொட்டப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அளித்த தடையில்லா சான்று ஆகியவற்றின் நகல்களையும், ஜெயகாந்தன் என்னிடம் கொடுத்த ஆவணங்களின் நகல்களையும் இணைத்துள்ளேன். உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டி என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/-த்தையும் (6 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்) மற்றும் ஜெயகாந்தன், உதவி மின் பொறியாளர் தங்க மாயாண்டிக்கு கொடுப்பதற்காக என்னிடம் அளித்த பணம் ரூ.2,500/-யையும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) S. கோபாலகிருஷ்ணன் 12/04/2022. **Sir, received the typed complaint on 12.04.2022 at 17.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai Vigilance & Anti-Corruption in Cr. No. 03/2022 u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 18.30 hrs and took up investigation Sd./-XXXXXX (A.Kannan) 12.04.2022, Inspr/ V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. S. Gopalakrishnan, S/o. V. Selvam, 3/98, Chettikulam Vadakarai, Kottampatti, Melur Taluk, Madurai District – 625 103 with enclousres, is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

A. Kannan
Inspr V&AC

**(A. Kannan)**
**Inspector of Police,** 12/4/2022
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**